# மலேசியாவின் தொடக்கக்கால இந்து ஆலயங்களும் அதன் வகைமைகளும்
# Early Hindu Temples in Malaysia and their Types

முனைவர் ஜெ. இந்துஜா ஜெயராமன் / Dr.J. Hinduja Jayer Raman [1]
முனைவர் பரமேஸ்வரி கிருஷ்ணன் / Dr.Parameswari Krishnan [2]

## Abstract

This study focuses on the types of Hindu temples in Malaysia. In the context of Malaysian history, there are two types of Hindu temples, namely urban and estate temples. However, there is another type of temples in Malaysia that should be noted, which are temples built by the laborers in public sectors. These temples were built by these workers wherever they were employed. This study aims to highlight the types of early Hindu temples in Malaysia as well as the various construction methods incorporated in establishing them. This study uses library methods, archival methods as well as observation methods to collect data. Via this study, the researcher shows the significance of the location of a temple and its crucial role in the lives of Malaysian Indians. As a temple offers a place to study, socialize, learn classical dances and religious science as well as to give and receive charity, it has become inseparable from the life of the Malaysian Indians. The temple also occupies a very important place in the life of this Indian community, which is represented by every aspect and part of temple building; it shows a bearing on the lives of Indian community and the broad meaning of life in general. The overall objective of this study is to highlight the link between the temples and Malaysian Indians in addition to explaining the variants found in temple construction. Since any research regarding this issue is non-existent, this study contributes a great meaning to the history of Hindu temples in Malaysia.

**Keywords:** Temples, Hindu, Indians, Malaysia, Labour.

Date of submission: 2020-05-25
Date of acceptance: 2020-05-30
Date of Publication: 2020-07-20
Corresponding author's
Name: Dr.Parameswari Krishnan
Email: param@unisel.edu.my

## அறிமுகம்

'கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்', 'ஆலயம் தொழுவது சாலவும் நன்று', 'கோபுர தரிசனம் கோடி புண்ணியம்' ஆகியன தமிழ்மொழியின் முதுமொழிகள். இந்துக்களின் இறை நம்பிக்கையிலும் வழிபாட்டு முறைகளிலும் கோயில் என்பது தொன்று தொட்டு இடம்பெற்று வருகின்ற சமய பண்பாட்டு அடையாளமாகும். இந்துக்களின் வழிபாட்டு முறை ஆன்மார்த்த வழிபாடு, பிரார்த்த வழிபாடு என இருவகையாக வகுக்கப்பட்டுள்ளன. இவண், ஆன்மார்த்த வழிபாடு என்பது இல்ல வழிபாட்டையும், பிரார்த்த வழிபாடு என்பது ஆலய வழிபாட்டையும் சுட்டுகின்றன. இந்துக்கள் ஆலயங்களை ஆன்மா இலயிக்கும் இடமாகவும், இறைவன் குடிகொண்டிருக்கும் தளமாகவும் பாவிக்கின்றனர்.

[1] The author is a freelance writer and currently working on the Sociology and Humanities in Malaysia hindujkh_87@yahoo.com

[2] The author is a lecturer in the Faculty of Education and Social Sciences, University of Selangor, Selangor param@unisel.edu.my

இந்து சமயத்தைப் பெருவாரியாக சார்ந்திருக்கக்கூடிய இனமாகத் தமிழரினம் விளங்குகிறது. நமது வாழ்வியல், பண்பாட்டு, கலாச்சார, நாகரிகக் குறியீடுகளில் கோயில் தனித்துவம் பெற்று விளங்குகிறது. அதே போல, இந்துக்கள் அதிகம் வாழக்கூடிய நாடாக இந்தியா விளங்குகிறது. இந்தியாவின் முக்கிய அடையாளமே கோயில்கள் என்பதையும் நாம் அறிவோம். மேலும், இந்தியர்களை அதிக காலம் அடிமைப்படுத்தி ஆண்ட பிரிட்டிஷ் ஆங்கிலேயர்களும் கூட இந்தியர்களை அடையாளப்படுத்தும்போது அவர்களை, 'temple building race' என்றே குறிப்பிடுகின்றனர்.

பூமியில் ஆதி மனிதன் தோன்றி பல கோடி நூற்றாண்டுகள் ஆகியிருந்தாலும்கூட, அவன் கூட்டத்தோடு நிரந்தரமாக ஓரிடத்தில் வசிக்க ஆரம்பித்த போதுதான் அவன் நாகரிக வளர்ச்சியை நோக்கி அடித்தளமிட்டதாக உலக மானுடவியல் கோட்பாடுகள் ஒருமனதாக ஒப்புக் கொள்கின்றன. அவ்வாறு ஓரிடத்தில் வசிக்க முற்பட்ட மனிதர்கள் தங்களின் வசிப்பிடத்தை ஆறுகள், குளங்கள் போன்ற நீர்நிலைகளின் அருகினில் அமைத்துக் கொண்டதை நாம் வரலாற்று நூல்களில் காண்கின்றோம். நீர் உயிர்களின் ஆதாரமாகச் செயல்பட்டதே இதற்குக் காரணம். மற்றொரு கோணத்தில், கோயில் அமைப்பில் ஒரு பகுதியாக குளங்கள் அவசியமாக இடம்பெறுவதையும் நம்மால் காண முடிகின்றது. இதன் காரணமாகவே 'கோயில் குளம்' எனும் சொல்லும் வழக்கில் உள்ளதைக் காண முடிகின்றது. இவ்வாறு நீர்நிலைகளை கோயிலின் ஓர் அங்கமாக ஏன் அமைத்தார்கள் நம் முன்னோர்கள்? இதற்கு சமூக ரீதியாகவும் சமய ரீதியாகவும் பல காரணங்கள் கூறப்பட்டாலும், கோயிலை இந்துக்கள் தங்களின் உயிரின் ஆதாரமாக பாவித்தனர் என்பதே அடிப்படைக் காரணமாகும். இதன் வழி, கோயில் இந்துக்களின் வாழ்வியலில் பெறும் முக்கியத்துவத்தை உணர முடிகிறது.

பிற்காலத்தில் இந்தியப் பெருநில மண்ணைக் கடந்து பல்வேறு காரணங்களுக்காக உலகின் பல மூலைகளுக்கு இடம்பெயர தொடங்கிய இந்துக்கள், தாங்கள் குடியேறிய மண்ணிலெல்லாம் ஆலயங்களை அமைத்துக் கொண்டதையும், அமைத்துக் கொள்ள வழிவகை செய்ததையும் காணலாம். அவ்வகையில்தான் இந்து ஆலயங்களின் கோபுர நிழல்கள் இந்திய மண்ணைத் தாண்டி மற்ற தேசங்களிலும் படரச் செய்தது. இன்று உலகிலேயே மிகப் பெரிய இந்து ஆலயமாகக் குறிப்பிடப்படும் 12 ஆம் நூற்றாண்டில் இரண்டாம் சூரியவர்மனால் கட்டப்பட்ட கம்போடியா நாட்டிலுள்ள 'அங்கோர் வாட்' (Angkor Wat) கோயிலும்கூட இந்த வகையைச் சார்ந்ததுதான்.

### மலேசியாவில் இந்து ஆலயங்கள்

"Hindu Religion in an Islamic State: The Case of Malaysia" எனும் 1995ஆம் ஆண்டில் நிறைவுபெற்ற தமது முனைவர் பட்ட ஆய்வேட்டில், திரு. இராமநாதன் காளிமுத்து என்பவர் மலேசியாவில் மொத்தம் ஏறத்தாழ 17,000 இந்து ஆலயங்கள் இருப்பதாகக் குறிப்பிடுகின்றார். நாட்டிலுள்ள பல ஆலயங்கள் இன்னும் முறையாகப் பதிவு பெறாத நிலையிலும், இன்றுவரை ஒரு நம்பகமான கணக்கெடுப்புமுறை இல்லாவிட்டாலும்கூட ஆய்வாளர் கா. இராமநாதனின் கணக்கெடுப்பு ஏற்புடையதாகவே உள்ளது என அங்கீகரிக்கப்பட்ட மலேசிய இந்து அமைப்புகள் ஒப்புக் கொள்கின்றன. இன்றைய நிலையில் இந்த எண்ணிக்கை கூடியோ குறைந்தோ இருப்பதற்கான சாத்தியக் கூறுகளும் உண்டு.

மலேசியாவில் மிகப் பழைமையான இந்து ஆலயமாகத் தரவுகள் சுட்டுவது, நாட்டின் வரலாற்று மாநிலமான மலாக்காவில் அமையப்பெற்ற ஸ்ரீ பொய்யாத விநாயகர் மூர்த்தி ஆலயம். இது 1781 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டதாகும். மலேசியாவில் மட்டுமில்லை, மாறாக தென்கிழக்காசியாவிலேயே இன்று வரை செயல்பட்டுக் கொண்டிருக்கும் பழைமையான கோயில் எனவும் இதற்குப்

பேர் உண்டு. ஆயினும், வழக்கில் இருக்கின்ற ஆலயங்களில் இருக்கின்ற ஆலயங்களில் மிகப் பழைமையானதாக மட்டுமே இதனை நாம் கருத்தில் கொள்ள வேண்டும். உண்மையில் இந்துக்கள் எக்காலம் தொட்டு இந்நாட்டுக்கு வர தொடங்கினார்கள் என்பதைப் பார்க்கும்போது, மலேசியாவில் இந்து ஆலயங்களின் தோற்ற வரலாறு இதற்கும் முற்பட்டதாக இருக்கின்றது.

அவ்வகையில், 'Hindu Temples in Malaysia' எனும் ஆய்வுக் கட்டுரையில் இந்நாட்டில் கி.பி. 4ஆம், 5ஆம் நூற்றாண்டுகளில் நிகழ்ந்த ஆரம்பக்கால இந்திய குடியேற்றத்தின்போது கோயில்கள் கட்டப்பட்டதாக ஆய்வாளர் கா. இராமநாதன் குறிப்பிடுகின்றார். ஆயினும், பின்னர் இந்நாட்டில் இந்து மதம் சந்தித்த வீழ்ச்சியால் அவை செல்வாக்கிழந்து வழக்கொழிந்து போயின. கெடாவிலுள்ள பூஜாங் பள்ளதாக்கு அகழ்வாராய்ச்சியின் மூலம் கண்டெடுக்கப்பட்ட சைவ சமய வழிபாட்டுச் சின்னங்களும், சிற்பங்களும், 50க்கும் மேற்பட்ட 'candi' என அழைக்கப்படுகின்ற சிறு சிறு வழிபாட்டுத் தளங்களும் இந்த நூற்றாண்டைச் சார்ந்தவைதாம் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும், இந்த நூற்றாண்டின்போது மலாயாவிற்கும் (சுதந்திரத்திற்கு முந்தைய மலேசியாவின் பெயர்) தென்னிந்தியாவிற்கும் வணிகத் தொடர்பு இருந்ததாகச் சங்க இலக்கியத்தைச் சார்ந்த பட்டினப்பாலையின் 191ஆவது செய்யுளடி குறிப்பிடுகின்றது. அதில் கெடா மாநிலம் 'காழகம்' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே, இக்காலக்கட்டம்தான் மலேசியாவில் இந்து ஆலயங்கள் முதன் முறையாக எழுப்பப்பட்ட காலக்கட்டமாக நாம் காண முடிகின்றது. மேலும், இந்தக் காலக்கட்டத்தில்தான் இந்துக்களாகிய இந்தியர்கள் அல்லது தமிழர்கள் இந்நாட்டில் தொடக்கக்கால குடியேற்றத்தை அமைத்து கொண்டனர் என்பதையும் அறியலாம்.

மலேசியாவில் இரண்டாம் கட்ட ஆலய நிர்மானிப்பு என்பது 15ஆம் நூற்றாண்டின்போது நிகழ்ந்த இந்தியக் குடியேற்றத்தின்போது நடைபெற்றதைக் காண முடிகின்றது. இந்தக் குடியேற்றத்தில் இந்திய வணிகர்கள் பெருவாரியாக இடம்பெற்றிருந்தனர். நிகழ்தளம் மலாக்கா. இங்குதான் முன்னர் குறிப்பிட்ட ஸ்ரீ பொய்யாத விநாயகர் மூர்த்தி ஆலயக் குறிப்பு இடம்பெறுகின்றது. வணிக நோக்கத்திற்காக மலேசியா வந்த இந்திய வியாபாரிகள் உள்ளூர் வாசிகளான மலாய்ப் பெண்களைத் திருமணம் செய்து ஒரு கலப்புப் பண்பாட்டு வாழ்வியலை உருவாக்கிக் கொண்டனர். இவர்கள்தாம் இன்று 'மலாக்கா செட்டிகள்' என்று அழைக்கப்படுகின்றனர்.

மலாக்கா மண்ணைப் பரமேஸ்வரா எனும் தமிழ் மன்னன் ஆண்டான் என்பது மலேசியா வரலாற்றிலிருந்து அழிக்க முடியாத செப்பேடு. அந்தத் தமிழ் மன்னனின் ஆட்சியில் வியாபாரம் செய்ய வந்தவர்கள்தாம் இவர்கள். இவர்கள் தங்களின் வழிபாட்டுக்காக ஆலயங்களை அமைத்துக் கொண்டுள்ளனர். அவ்வாறு அமைக்கப்பட்ட கோயில்கள்தாம் ஸ்ரீ பொய்யாத விநாயகர் மூர்த்தி ஆலயம் (1781), ஸ்ரீ காளியம்மன் ஆலயம் (1804), ஸ்ரீ முத்து மாரியம்மன் ஆலயம் (1822), கைலாசநாதர் சிவன் ஆலயம் (1887), ஸ்ரீ அங்காளம்மன் ஆலயம் (1888).

ஆயினும், இவை மலாக்காவில் டச்சுக்காரர்கள் ஆட்சிக்கு வந்த பின்னரே கட்டப்பட்டன. அதாவது, மலாக்காவில் இந்தியர்கள் குடியேறிய ஏறத்தாழ 300 ஆண்டுகளுக்குப் பிறகே. அப்படியென்றால், 300 ஆண்டுகள் வரையில் இவர்கள் கோயில் எழுப்பி வழிபாடுகள் செய்யவில்லையா எனும் கேள்வி மேலோங்குவதன் மூலம் அதற்கு முன்னரே ஆலயங்கள் அன்றைய மலாயாவில் உருவாக்கப்பட்டிருப்பதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதை உணரலாம்.

அவ்வகையில், நாட்டின் நன்கு அறிமுகமான வரலாற்று எழுத்தாளர் மலாக்கா முத்துக்கிருஷ்ணன், பரமேஸ்வரா ஆண்ட காலத்திலேயே மலாக்கா செட்டிகள் தங்களுக்கென சிறு கோயிலை மலாக்கா

புறநகர் பகுதியில் கட்டிக் கொண்டதாகக் குறிப்பிடுகின்றார். அக்கோயில் கஜபதி அம்மன் கோயில் என்று அழைக்கப்பட்டது. கஜம் என்றால் யானை. இதுவே, மலாய் மொழியில் 'Gajah' என்றும் மருவியது. அக்கோயில் இடம்பெற்ற ஊர் 'கஜபுரம்' என்று அழைக்கப்பட்டு, பின்னாளில் 'Gajah Berang' என்று நிலைத்துப் போனது. இந்த அம்மன் கோயில் 1770ஆம் ஆண்டிலிருந்து செயல்பாட்டில் உள்ளதாக அறியப்படுகிறது.

இந்த ஆலயத்தைத் தவிர, தர்மராஜா ஆலயமும் 1770 ஆம் ஆண்டு வாக்கில் அதே இடத்தில் தோற்றுவிக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது. மேலும், அந்த இடத்தில் உருவான மற்ற கோயில்களாக லிங்காதாரியம்மன் ஆலயம், கட்டையம்மன் ஆலயம், ஸ்ரீ அய்யனார் ஆலயம், ஸ்ரீ காத்தாயி அம்மன் ஆலயம் ஆகியன குறிப்பிடப்படுகின்றன. மலாக்கா செட்டிகளால் தொடக்கத்தில் உருவான இவ்வாலயங்களில் பல இன்று இலங்கைத் தமிழர்களால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன.

அடுத்ததாக மலேசியாவில் கோயில்களின் உருவாக்கங்கள் 18 ஆம், 19 ஆம் நூற்றாண்டுகளில் அதிகமாக நிகழ்த்தப்பட்டு இன்றுவரை நிலைநிறுத்தப்பட்டுள்ளன. இன்று உள்ள பல கோயில்களும் இந்த நூற்றாண்டின்போது பிரிட்டிஷ் காலனித்துவ ஆட்சியின்கீழ் பெரிய எண்ணிக்கையில் குடியேற்றப்பட்ட இந்தியர்களால் கட்டப்பட்ட கோயில்களாகும். இவர்களின் அதிக அளவிலான குடியேற்றம் இந்நாட்டில் முக்கிய மூவினங்களில் ஒன்றாக இந்தியர்கள் உருவாவதற்குக் காரணமானது. மேலும், இக்காலக்கட்டத்தில் குடியேற்றப்பட்டவர்களுள் 95 விழுக்காட்டினர் தென்னிந்தியர்கள் எனவும், அவர்களுள் 80 விழுக்காட்டினர் இந்துக்கள் எனவும் தரவுகள் சுட்டுகின்றன. மலேசிய இந்தியர்களுள் பெரும்பான்மையினர் இந்துக்கள் என்கின்ற இந்த நிலையை இன்றும் இவர்கள் தக்க வைத்துள்ளனர்.

மூன்றாம் கட்டமாக நடைபெற்ற இந்தக் குடியேற்றம், தொடக்கக் கட்டமாக பினாங்கு மாநிலத்திலிருந்து தொடங்கப்பட்டதை வரலாற்றிலிருந்து நாம் அறியலாம். 1786ஆம் ஆண்டு பினாங்குத் தீவைக் கைப்பற்றிய பிரிட்டிஷ் அரசாங்கம், அம்மண்ணின் இயற்கை வளங்களையும் கனிமங்களையும் தங்களின் தாய்நாட்டிற்கு கொண்டு செல்ல ஏதுவாக அயராது உழைக்கவும் அடிபணியவும் செய்யும் தென்னிந்தியர்களைக் கூலிகளாக மலாயாவிற்கு இறக்குமதி செய்ய முடிவெடுத்தது. அவ்வாறு தேயிலை, காப்பி தோட்ட வேலைகளுக்காக ஒப்பந்தக் கூலிகளாக (சஞ்சிக் கூலிகளாக) அழைத்து வரப்பட்ட தென்னிந்தியர்கள் S.S. ரஜூலா (Straits Service Rajula) கப்பலின் மூலமும், State of Madras கப்பலின் மூலமும் வந்திறங்கிய இடம்தான் பினாங்கு. பினாங்கிற்கு வந்த இந்துக்கள் முதன் முதலாக வழிபாட்டிற்கு எழுப்பிய கோயிலாக பினாங்கு Queen Streetஇல் அமைந்துள்ள ஸ்ரீ மகா மாரியம்மன் ஆலயம் திகழ்கிறது. அன்று ஆட்சியில் இருந்த பிரிட்டிஷ் அரசாங்கத்தின் ஒப்புதலோடு 1801ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்ட இந்த வழிபாட்டுத் தளம், 217 ஆண்டுகள் கடந்தும் அதே இடத்தில் இன்றுவரை கம்பீரமாகக் காட்சியளிக்கிறது.

பினாங்கு, கெடா, மலாக்கா தவிர்த்துள்ள மலாயாவின் பிற மாநிலங்களுக்கு இந்தியர்களின் குடியேற்றம் 1874 ஆம் ஆண்டுக்குப் பின்னரே இரப்பர் தோட்ட விரிவாக்கத்தினால் பரவலாக நடைபெறத் தொடங்கியது. இக்குடியேற்றத்தில் சம்மந்தப்பட்ட இந்தியர்களை தமது "Thaipusam in Malaysia: A Hindu Festival in the Tamil Diaspora" எனும் நூலில் முப்பிரிவினராக வகைப்படுத்துகிறார் ஆய்வாளர் Carl Vadivella ஙிமீறீமீ. அவை: 1) சிறுபான்மையினரான மேல்தட்டு இந்தியர்கள் 2) நடுத்தர தொழில்முறை, வர்த்தக இந்தியர்கள் 3) ஏறத்தாழ 80 விழுக்காட்டு பெரும்பான்மையினரான தோட்டத் தொழிலாள இந்தியர்கள். இவர்கள் அனைவரும் தாங்கள் குடியேறிய பகுதிகளில் வழிபாட்டிற்காகக் கோயில்களை அமைத்துக் கொண்டனர்.

தோட்ட வேலைக்காகக் குடியேறியவர்களின் வாழ்விடம் தோட்டப்புறங்களாக இருந்த வேளையில், மற்ற இரு சாராரும் பொதுப்பணித்துறையின் கீழ் சாலை அமைப்பதற்காகவும், இரயில் தண்டவாளப் பாதைகளை நிர்மாணிப்பதற்காகவும், வணிக நோக்கத்திற்காகவும் நகர்ப்புறங்களில் குடியேறினர்.

அவ்வாறு புறநகர்களிலும் (தோட்டக்காடுகள்) நகர்களிலும் ஏற்பட்ட குடியேற்றங்கள் இந்த நாட்டில் இரு வகையான ஆலயங்கள் உருவாவதற்குக் காரணமாயின. அவை: 1) தோட்டம் சார்ந்த கோயில்கள் 2) நகர் சார்ந்த கோயில்கள். இவ்விரு பிரிவு ஆலயங்களை இப்படியும் வகைப்படுத்தலாம்: 1) ஆகமம் சாரா கோயில்கள் 2) ஆகமம் சார்ந்த கோயில்கள். பெரும்பாலும் தோட்டக் கோயில்கள் ஆகமம் சாரா கோயில்களாகவும், நகர்க்கோயில்கள் ஆகமம் சார்ந்த கோயில்களாக இருந்துள்ளன.

அக்காலக்கட்டத்தில் தோட்டப்புறங்களில் குடியேறிய இந்துக்கள் குறைந்தபட்ச கல்வியறிவு கொண்டவர்களாகவும், நகரங்களில் குடியேறியவர்கள் படிப்பறிவு கொண்டவர்களாகவும் இருந்ததே இப்பாகுபாட்டிற்குக் காரணங்களாயின. தோட்டப்புறத்தில் வாழ்ந்த தொழிலாளர்கள் தோட்டம் சார்ந்த கலாச்சாரத்தைப் பின்பற்றினர். பொதுவாக இவர்கள் சொற்பமான கல்வியறிவு கொண்டவர்களாகவும், குறைந்த வருமானம் பெறுபவர்களாகவும், சுதந்திரமாகச் செயல்பட அனுமதிக்கப்படாதவர்களாகவும், பிறரின் ஆதிக்கத்திற்கு உட்பட்டவர்களாகவும், பல்வேறு சமூகச் சிக்கலில் உழல்பவர்களாகவும் இருந்துள்ளனர். இதன் காரணமாகவே இவர்களால் எழுப்பப்பட்ட கோயில்களும் ஆகம முறையைப் பின்பற்றாது இயங்கி வந்துள்ளன.

மலாயா நகரத்து இந்துக்களின் இயல்புகள் தோட்டத்து இந்தியர்களின் இயல்புகளுக்கு எதிர்மறையானவை. அவர்கள் பெற்றிருந்த கல்வியறிவின் மூலமும், ஓரளவுக்குச் சீரான நிதிவளமும், சுதந்திரமாகச் செயல்படக்கூடிய தன்மையினாலும், நடுத்தரமேல் நிலை சமூகவர்க்க அந்தஸ்தைப் பெற்றிருந்ததாலும், சமூகச் சிக்கலால் அழுந்தும் நிலையின்மையும் மலாயாவில் ஆகமக் கோயில்கள் உருவாவதற்குக் காரணமாயின. குறிப்பாக, இந்நாட்டில் ஆகமம் சார்ந்த கோயில்களை எழுப்பியதில் பெரும்பங்கு செட்டியார்களையும் இலங்கைத் தமிழர்களையும் சேரும். இவர்களால் எழுப்பப்படும்நிர்வகிக்கப்படும் கோயில்கள் ஆகம விதிகளை கோட்பாடுகளைச் சார்ந்திருப்பதை இவர்கள் உறுதி செய்தார்கள்.

## ஆகமம் மற்றும் ஆகமம் சாரா ஆலயங்கள்

ஆகமம் சார்ந்த மற்றும் ஆகமம் சாரா ஆலயங்களின் இயல்புகள், கூறுகள் எவ்வாறு வேறுபட்டிருக்கின்றன என்பதை விளக்குவதாக இப்பகுதி அமைகிறது. மேலும், இந்து சமயம் எடுத்தியம்பும் ஆகமக் கோட்பாடுகள் மிக விரிவானவை; துல்லியமானவை. அவற்றை முழுவதுமாக இந்நூலில் விளக்கப்படுத்துவது இயலாத காரியமாகும். ஆயினும், வழக்கத்தில் கடைப்பிடிக்கக்கூடிய பொதுவான அடிப்படை ஆகமக் கோட்பாடுகளை இப்பகுதியில் அறிந்து கொள்ளலாம்.

இவற்றுள் தலையாயது ஆலயத் தோற்றம். ஓர் ஆலயத்தின் அமைப்பு முறை மனித உடலை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்டிருக்க வேண்டும் என்கிறது ஆகமம். தமது உடலையே கோயிலாகக் கொண்டார் பூசலார் நாயனார் என்பதை தொண்டர் புராணம் கூறுகிறது. சித்தர் பெருமான் திருமூலரும் உடலே கோயிலாக விளங்குவதை, “உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம், வள்ளற் பிரானுக்கு வாய் கோபுரவாயில், தெள்ளத் தெளிந்தார்க்கு சீவன் சிவலிங்கம், கள்ளப்

புலனைந்தும் காளாமணி விளக்கே” என்று தெளியப்படுத்துகிறார்.

உடலே கோயிலாய் எழுந்துள்ளதை ‘ஷத்திரம் சரீரப் பிரஸ்தாரம்’ என்கிறது ஆகமச் சொற்றொடர். உடலில் பாதங்கள் கோபுரமாகவும், முழங்கால் ஆஸ்தான மண்டபமாகவும், தொடை நிருத்த மண்டபமாகவும், கொப்பூழ் (தொப்புள்) பலிபீடமாகவும், மார்பு மகா மண்டபமாகவும், கழுத்து அர்த்த மண்டபமாகவும், சிரம் கருவறையாகவும் கொண்டு எழுந்துள்ளது என்பன ஆகம மரபு.

இவையல்லாது, குறைந்தபட்சமாக ஆகம விதிப்படி அமையும் ஆலயங்கள் கருவறை, ஒன்று முதல் ஐந்து பிரகாரங்களுடன் கூடிய இராஜகோபுரம், பலிபீடம், கொடிமரம், யாகசாலை, நந்தி/வாகனம் ஆகியவற்றுடன் விளங்க வேண்டியது அடிப்படை கூறுகள். இந்த அமைப்பிலான ஆலயங்களை முன்னரே குறிப்பிட்டதைப் போன்று தொடக்கக்காலங்களில் தோட்டக்காடுகளில் காண்பது அரிது. மாறாக, தோட்டத் தொழிலாளர்களின் முனைப்பில் எழுப்பப்பட்ட கோயில்கள் கோபுரமின்றியும், கருவறை இன்றியும், கொடிமரம் இன்றியும் கூட அமைக்கப்பட்டிருந்தன. மேலும், இவை காண்பதற்கு ஒரு திறந்த தகரக் கொட்டகை போன்று காட்சியளிக்கும்.

இவ்வகை ஆலயங்களிலுள்ள வழிபடு தெய்வங்களின் திருவுருவச் சிலைகள் சிற்ப சாத்திரத்தின் அடிப்படையில் கருங்கல்லினால் இல்லாது மாறாக, மரம், சுண்ணாம்பு, களிமண் அல்லது சிமெண்ட்டினால் செய்யப்பட்டு வண்ணம் பூசப்பட்டிருக்கும். மேலும் சில ஆலயங்களில் சிலைகள் இல்லாது திரிசூலம், செங்கல், புற்று, மரம், வேல், வாள் போன்ற குறியீடுகளை முதன்மையாக இருத்தி வழிபாடுகள் மேற்கொள்ளப்படும். பெருந்தெய்வங்களோடு சிறுதெய்வங்களும் வழிபடு தெய்வங்களாக இருக்கும்.

கோயில் எழுப்புவதே மூலவிக்கிரகத்தை வைத்து வழிபடுவதற்குத்தான் என்றபோது, ஆகம கோட்பாடுகளுக்குட்பட்ட ஆலயங்களில் தெய்வ சிற்பங்கள் சிற்ப சாத்திர அடிப்படையில் வடிவமைக்கப்பட்டு முறையாக பிரதிஷ்டை செய்யப்படும். பொதுவாக, இருவகையான சிற்பங்கள் இவற்றுள் அடங்கும். அவை: 1) சலம் (அதாவது அசைக்கக்கூடியது; ஊர்வலமாக எடுத்துச் செல்லக் கூடியது). 2) அசலம் (நிலையாக ஓர் இடத்தில் நிறுவப்பட்டது. அசையக்கூடிய சிற்பங்கள் பொதுவாக வெண்கலத்தாலும், பஞ்சலோகத்தாலும் வடிக்கப்படுவன. மாறாக, மூலவிக்கிரகம் கல்லினால் ஆக்கப்பட்டதாகும். இவற்றையும் தவிர்த்து சலாசலம் என்றொரு வகையுண்டு. இவ்வகை சிற்பங்கள் ஓரிடத்தில் நிலைத்தும் இருக்கும்; ஊர்வலத்தில் உலா வரவும் செய்யும். இவ்வாறு முறையாகச் சிற்பங்களை வடித்து, அழகுற ஆலயம் எழுப்பி முடிந்ததும் கோயிலைப் புனிதப்படுத்தி, சிற்பங்களை இறைத்தன்மை உடையதாக்கும் விதமாக திருவுருவம் நிறுவும் சடங்கு நடத்துவிக்கப்பட வேண்டும். இதனைப் பரவலாக ‘குடமுடக்கு விழா’, ‘கும்பாபிஷேகம்’ என்பர்.

ஆகமக் கோயில்களின் வழிபடு தெய்வங்களாகப் பெருந்தெய்வங்களே விளங்குகின்றன. குறிப்பாக சைவம் (சிவன்), வைணவம் (விஷ்ணு), சாக்தம் (சக்தி), காணாபத்தியம் (கணபதி), கௌமாரம் (சுப்பிரமணியர்), சௌரம் (சூரியன்) ஆகிய சமயப் பிரிவுகளில் சுட்டப்படும் தெய்வங்களே பெருந்தெய்வங்கள் எனக் கொள்ளபடுகின்றன. அன்றைய மலாயாவில் ஆகம ஆலயங்கள் பெரும்பாலானவை முருகனுக்கும் அம்மனுக்கும் உரியனதாக இருந்தன.

தோட்டப்புற ஆலயங்களிலும் வணங்கப்பட்ட பெருந்தெய்வங்களாக மாரியம்மனும் முருகனும் விளங்கினர். இவற்றைத் தவிர்த்து தோட்டப்புற ஆலயங்களில் பரவலாக நிறுவப்பட்ட தெய்வங்களாகச் சிறுதெய்வங்களே விளங்குகின்றன. அவ்வகையில்

காளியம்மன், முனியாண்டி, முனீஸ்வரன், மதுரைவீரன், கருப்பண்ணன், நாகம்மா, பேச்சாயி, அனுமன், திரௌபதி, இடும்பன், அங்காலம்மன், பைரவர் போன்ற தெய்வங்களைக் குறிப்பிட்டுச் சொல்லலாம். ‘குலதெய்வம்’ அல்லது ‘இஷ்டதெய்வம்’ என்ற அடிப்படையில் இச்சிறுதெய்வங்கள் அவ்வாலயங்களில் மூலதெய்வங்களாக இருத்தி வழிபடலாயின.

இவ்வாறு ஆலயங்களில் எழுப்பப்படும் தெய்வங்களுக்கு முறையாக வழிபாடுகள், பூசைகள் நடத்தப்பட வேண்டும் என்கிறது ஆகமம். நித்திய பூசை எனப்படும் தினசரி பூசை கட்டாயமாக வலியுறுத்தப்படுகின்றது. நகரத்து ஆகமக் கோயில்களில் இது முறையே பின்பற்றப்பட்டது. தினம் ஒரு முறையாவது பூசை நடைபெற வேண்டும் என்பது குறைந்தபட்ச விதி. ஆறுகால பூசையாகவும் (சூரியோதயத்திற்கு முன்பு, சூரியோதயத்திற்குப் பின்பு, காலை 8 லிருந்து 9 மணி வரை, நண்பகல், மாலை, இரவு) நித்திய பூசையை வைத்துக் கொள்ளும் ஆலயங்களும் உண்டு. தவிர, 24 கால பூசைகளையும் நடத்தும் ஆகம ஆலயங்களும் உண்டு. பூசையின்போது ஒவ்வொரு முறையும் தெய்வங்களை நீராடச் செய்து, ஆடைஅலங்கார ஆபரணங்களை அணிவித்து, உணவு படைத்து, திரை விலக்கி, விளக்குஆரத்தி காட்டி வழிபாடுகள் நடத்துவிக்கப்படும்.

நித்திய பூசையைத் தவிர்த்து நைமித்திக பூசை என்னும் அவ்வப்போது நடக்கும் சிறப்பு பூசைகளும் இடம்பெறும். இவற்றைப் பண்டிகைப் பூசைகள் என்றும் சொல்லலாம். சிவராத்திரி, வைகுண்ட ஏகாதசி, நவராத்திரி, பங்குனி உத்திரம், தைப்பூசம், விநாயகர் சதுர்த்தி போன்றவை இவற்றுள் அடங்கும். நித்திய பூசை தவறாமல் நிகழ்வதோடு இந்தச் சிறப்பு பூசைகளும் நடத்துவிக்கப்படும். இச்சிறப்பு பூசையின்போது ஹோமங்கள், அபிஷேகங்கள், ஊர்வலங்கள் போன்ற பல கூடுதல் சிறப்பு வழிபாடுகளும் இடம்பெறும். இவை யாவும் ஆகம விதிகளைப் பின்பற்றும் ஆலயங்களின் பூசை முறைகளாகும்.

மாறாக, தோட்டப்புறங்களில் உள்ள ஆலயங்களில் நாளுக்கு ஒரு முறைதான் பூசை நடத்தப்படும்; அதுவும் மாலை வேளையில் மட்டுமே. மேலும், நகரக் கோயில்களைப் போல தெய்வங்களை நீராட்டி, அலங்காரம் செய்வித்து பூசைகள் நடத்துவது குறைவு. மாறாக, முதல்நாள் அணிவித்த மாலைகளை அகற்றி, புதிய பூமாலைகளை அணிவித்து, ஆரத்தி காட்டி, திருநீறு சந்தன குங்கும பிரசாதத்தை கொடுத்து எளிய துரித முறையில் பூசைகள் நிறைவு பெற்றிடும். மந்திரங்கள் ஓதி, தேவாரதிருவாசகங்களைப் பாடி வழிபாடு செய்தல் இவ்வகை ஆலயங்களில் அரிதாகும். ஆண்டுக்கு ஒருமுறை ஆண்டுவிழா அல்லது திருவிழா வெகு விமரிசையாக நடத்தப்படும். இதுவே, தோட்டக் கோயில்களின் சிறப்பு பூசையாகக் கொள்ளப்படும். சிறுதெய்வங்களைக் கொண்டு வழிபடும் கோயில்களில் இச்சிறப்பு பூசையில் ஆடு, கோழி, சேவல் பலியிடப்பட்டு இறைவனுக்குப் படையல் வைக்கப்படும். ஆகம விதியைப் பின்பற்றும் நகரத்து ஆலயங்களில் சைவ உணவுகளே இறைவனுக்குப் படைக்கப்படும்.

நகரக் கோயில்களின் பூசை முறைகளும் தோட்டக் கோயில்களில்களின் பூசை முறைகளும் இத்துணை வேறுபட்டதற்குப் பல காரணங்கள் உண்டு. ஆகம விதியை முன்னிருத்தும் நகரக் கோயில்கள் வழிபாடுகளை மேற்கொள்ள குருக்களைத் தென்னிந்தியாவிலிருந்து தருவித்தது. அதற்கான நிதிவளத்தை, ஆள்பலத்தையும், ஆவண ஒழுங்கும் கொண்டிருந்தன செட்டியார்களாலும் இலங்கைத் தமிழர்களாலும் நிர்வகிக்கப்படும் அக்கோயில்கள். அதிக வசதி படைத்த கோயில்களில் நாதஸ்வரமேள இசைக் கலைஞர்கள், சமையற்காரர்கள், திருமுறை ஓதுவார் ஆகியோரும் தருவிக்கப்படுவர்.

மாறாக, தோட்டக் கோயில்களின் சிறப்புப் பூசைகள் உட்பட அனைத்தும் ஆகம கல்வி பெறாத பூசாரிகளாலும் பண்டாரங்களாலும் நிகழ்விக்கப்பட்டன. இன்னும் சில தோட்டக் கோயில்களில்

தொழிலாளர்களுள் ஓரளவு சமய அறிவு உள்ளவருக்குப் பகுதிநேர ஆலய பூசாரி பணி வழங்கப்படும். இவர் காலையில் தோட்ட வேலையையும் மாலையில் பூசாரியாகவும் செயல்படுவார். அன்றைய மலேசிய சூழலைப் பொருத்தவரை ஆலயங்களில் அன்றாட பூசைகளை மேற்கொள்பவர்கள் பண்டாரமாக அறியப்படுவர். இவர்களுள் இரு பிரிவினர் உண்டு. தலைமுறை தலைமுறையாக இதனைக் குலதொழிலாக ஏற்று நடத்துபவர் ஒரு சாரார்; இவர்களிடமிருந்து அடிப்படை விசயங்களைக் கற்று பின்னர் பண்டாரமாகத் தன்னை மாற்றிக் கொண்டவர்கள் மற்றொரு சாரார். பொதுவாக இவர்களைப் பிராமணர்கள் அல்லாத ஆலயப் பண்டிதர் என்பர்.

ஆலயங்களை நிர்வகிக்கப் போதிய நிதிவளம் இல்லாததே தோட்டக் கோயில்களின் இந்நிலைக்குக் காரணமாகும். தோட்டத் தொழிலாளர்களால் தோட்ட நிர்வாகத்தின் அனுமதியோடு எழுப்பப்படுகின்ற இந்த ஆலயங்களுக்கு நிதி ஆதரவு இரண்டு வகையில் வந்து சேர்கின்றது. முதலாவதாக தொழிலாளர்களிடையே குறைந்த அளவில் வசூலிக்கப்படும் ஆண்டு சந்தா. மற்றொன்று தோட்ட நிர்வாகம் வழங்கும் குறைந்த தொகையிலான மானியம். இவற்றைக் கொண்டு பயிற்சி பெற்ற குருக்களைத் தருவிப்பது என்பது அன்றைய காலக்கட்டத்தில் இயலாத காரியமாகும்.

இதுவரையில் குறிப்பிடப்பட்ட நகர ஆலயங்களும் தோட்டப்புற ஆலயங்களும் மலாயாவில் இந்தியர்களின் வாழ்விடங்களை அடிப்படையாகக் கொண்டு, அவர்களின் சமூகசமயத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள வேண்டி அவர்களால் அமைத்துக் கொள்ளப்பட்ட ஆலயங்களாகும். ஆயினும், இவ்விரு பிரிவினையும் தாண்டி மூன்றாவது பிரிவு ஒன்றுண்டு. அது, மலாயாவில் சாலை அமைப்பதற்காகவும் இரயில் தண்டவாளங்களைப் போடுவதற்காகவும் அடர்ந்த காடுகளை அழிப்பதற்காகவும் வரவழைக்கப்பட்டு, பொதுப்பணித்துறையின்கீழ் வேலைக்கு அமர்த்தப்பட்ட இந்தியர்களால் நிறுவப்பட்ட ஆலயங்களாகும். இவர்களின் வாழ்விடம் நகரங்களாக இருப்பினும், வேலை காரணமாக பயணிக்க வேண்டிய கட்டாயம் இவர்களுக்குண்டு. நாட்டின் ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு காடுகளை அழித்துக் கொண்டும் சாலைகளைப் போட்டுக் கொண்டும் செல்வது இவர்களின் வழக்கமாயிருந்தது. அவ்வாறு பணியில் ஈடுபட்டு மரங்களை வெட்டும்போதோ, பாறைகளைப் பிளக்கும்போதோ காணும் அதிசயங்களைக் கொண்டு ஆலயங்கள் அந்தந்த இடங்களில் நிறுவப்பட்டன. இத்தகையான ஆலயங்கள், இறைவன் அற்புதத்தை நிகழ்த்தி காட்டி 'இங்கே ஆலயம் எழுப்பப்பட வேண்டும்' என்று பணித்ததன் நோக்கில் நிறுவப்பட்ட அதிசய ஆலயங்களாகத் திகழ்கின்றன.

இம்மூன்றாம் பிரிவைச் சார்ந்த மிகவும் பிரசித்தி பெற்ற ஆலயமாக விளங்குவது மாரான் ஸ்ரீ மரத்தாண்டவர் ஆலயமாகும். பகாங்கில் 'பெந்தா' எனுமிடத்தில் அமைந்துள்ள 'ஸ்ரீ பத்துமலை ஆண்டவர் ஆலயமும்' இப்பிரிவினைச் சார்ந்த ஆலயம் என்றே அறிகிறோம். அங்குச் சாலை அமைப்பதற்காகப் பாறைகளை அகற்றும் பணியிலிருந்த ஆட்களின் ஆயுதம் பட்டு பாறையிலிருந்து இரத்தம் பீறிட்டதாகக் கூறப்படுகின்றது. பின்னர், அவ்விடத்திலே முருகப்பெருமானுக்குக் கோயில் அமைத்து வழிபடலாயினர். அந்தப் பாறை இன்றும் அங்கு வழிபாட்டிற்குள்ளது. மூன்றாம் பிரிவைச் சார்ந்த கோயில்களைத் தனியாக வகைப்படுத்தியோ, முக்கியத்துவம் அளித்தோ இதுவரை எந்த ஆய்வுகளும் முழுமையாக மேற்கொள்ளப்படவில்லை. இந்தப் பிரிவு ஆலயங்கள் ஆய்வுக்குட்படுத்தப்படின், அது வரலாற்றறிவுக் கருவூலமாக மட்டுமின்றி, அதிசயக் கருவூலமாகமும் விளங்கும் என்பது திண்ணம்.

## இறுதியாக

உலகத் தமிழர் வாழ்வியலில் ஆலயங்கள் வழிபடு தளமாக மட்டுமின்றி சமூக வாழ்வியலைப் பேணி பராமரிக்கும் தலைமையமாகவும் அரணாகவும் செயல்பட்டன. இதன் பொருட்டுதான் பார்புகழ் தமிழ் மன்னர்களும் மிகுந்த பொருட்செலவில் ஆலயங்கள் கட்டமைக்கின்ற பணிகளைத் தங்களின் நேரடி பொறுப்புக்குட்படுத்தி ஆயிரமாயிரம் ஆண்டுகள் தாண்டியும் கட்டுமானத்தாலும் கீர்த்தியாலும் நிலைத்து நிற்கக் கூடிய ஆலயங்களை எழுப்பியிருந்தனர். ஆயக் கலைகளின் பயிலரங்காகவும், நெற்பயிர்களின் கிடங்காகவும், பொன், பொருள், ஆபரணங்களின் அரசு கஜானாகவும், பேரிடர் காலங்களின் புகலிடமாகவும் ஆலயங்கள் திகழ்ந்தன.

கோயிலின் ஒவ்வொரு கட்டமைப்புக்கும் விஞ்ஞானம், அஞ்ஞானத்தோடு சேர்த்து, சமூக விஞ்ஞானமும் கருத்தில் கொள்ளப்பட்டன. உயரமான கோபுரங்கள் அவசியம்தானா என்பதற்கு அதிலுள்ள கலசங்களுக்குள் பதிலை நெல், கம்பு, கேழ்வரகு, திணை, வரகு, சோளம், சாமை, எள் ஆகிய தானிய வகைகளாக நிரப்பி வைத்தார்கள். வெள்ளம், புயல் போன்ற இயற்கை சீற்றத்தினால் விவசாயங்கள் அழிந்து போனாலும், மீண்டும் விவசாயத்தைச் செய்ய தானியங்களை உயரே இருக்கும் கோபுரக் கலசங்களிலிருந்து எடுத்துக் கொள்ளலாம். இந்தத் தானியங்களின் வீரியம் 12 ஆண்டுகள் வரை மட்டுமே தாக்குபிடிக்கக்கூடியவை என்பதால்தான் 12 ஆண்டுகளுக்கொருமுறை குடமுழுக்கு விழா என்ற பெயரில் கலசங்களில் உள்ள பழைய தானியங்கள் நீக்கப்பட்டு புதியவை நிரப்பபடும்.

இன்றைய சூழலில், கால மாற்றத்தால் தினசரி வரையறைக்குட்பட்டு (everyday define) செயலாக்க முறைகளில் மாற்றங்கள் ஏற்பட்டாலும், மூல வரையறை (authority define) நிர்ணயித்த செயலாக்கங்கள் மாறவில்லை. ஆனாலும் கோயில், சமூக அமைப்பைப் பாதுகாக்கக்கூடிய கூறுகளின் மூல நோக்கங்களிலிருந்து பிசகாமல் பார்த்துக் கொள்ளும்போது அதன் இருப்பும் தேவையும் கேள்விகளுக்கு இடமின்றி வலுபெறுகின்றது. நிலவிவரும் கோவிட்19 கொள்ளை நோய்க் காலத்தில் மலேசியாவில் சில ஆலயங்கள் அரசுக்கு இணையாக நிவாரண ஊக்குவிப்புத் தொகையையும் பொருளையும் வழங்கியதே இதற்கு வலுசேர்ப்பதாய் அமைவதை நாம் காண முடிகிறது. கோயிலோடு சேர்ந்து இவற்றையும் புரணமைப்பது காலத்தின் தேவையாகும்.

## References

https://ksmuthukrishnan.blogspot.com

Hinduja Jayer Raman. J. (2015). Pemaparan Nilai Jati Diri Tamil Malaysia: Kajian Kes Terhadap Drama Tamil Tempatan Di Astro Vanavil, Tesis Ph.D, Jabatan Pengajian India, Fakulti Sastera Dan Sains Sosial, Universiti Malaya, Kuala Lumpur.

Manimaran Subramaniam. (1995). 'Agama Dan Kepercayaan Di Kalangan Penganut Hindu: Satu Kajian Kes Di Daerah Kuala Selangor, Disertasi Ijazah Sarjana, Jabatan Pengajian India, Fakulti Sastera Dan Sains Sosial, Universiti Malaya, Kuala Lumpur.

Manimaran Subramaniam. (2014). 'Agama Hindu Dan Pembentukan Identiti India Di Malaysia: Kajian Mengenai PertubuhanPertubuhan Agama Hindu Di Malaysia', Tesis Ph.D, Jabatan Pengajian India, Fakulti Sastera Dan Sains Sosial, Universiti Malaya, Kuala Lumpur.

Marian Aveling. (1978). Ritual Change in the Hindu temples of Penang, Contribution to Indian Sociology (NS), Vol. 12, No. 2, Australia: University of Western Australia.

Rajantheran. M. (1997). Kepercayaan Orang India, Shah Alam: Penerbit Fajar Bakti.

Rajantheran. M, Manimaran. S. (1994). Perayaan Orang India, Kuala Lumpur: Penerbit Fajar Bakti Sdn. Bhd.

Rajantheran. M, Silllalee. K, Viknarasa. R. (2012). An Introduction to Hinduism, Selangor: Malaysian Hindu Sangam.

Vineeta Sinha. (2011). Religion-State Encounters in Hindu Domains: From the Straits Settlemments to Singapore, New York: Springer.

Vineeta Sinha. (2011). Religion and Commodification: ‘Merchandizing’ Diasporic Hinduism, New York: Routledge.

Vilvamalar. S. (t.t.). Malechiya Thirukkoyilgal (Temples of Malaysia). Part 2, Kuala Lumpur: Jaya Bakti Publications.